# தூதன்

தூதன்-25 செப்டம்பர் 2016 தூது-8



"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்."
யோவான் 17:21

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| ஆராதனை பாடல்கள் | 11 |
| செயலர் மடல் | 12 |
| வனாந்திரப் பாதையில் எத்தியோப்பிய மந்திரி | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| வேதவினா போட்டி | 20 |
| தெரிந்து கொள்வோம் | 22 |
| Summer Camp | 24 |
| Young Readers Column | 26 |
| Health Tips | 28 |
| Birthday Celebrants | 30 |
| Wedding Anniversary Celebrants | 33 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

## திருமுழுக்கு என்னும் சாக்கிரமெந்து
## (The Sacrament of Baptism)

கிறிஸ்துவுக்குள் எனதன்பு உடன் விசுவாசிகளே,

புதுவாழ்வின் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். விடுமுறைக் காலங்கள் மகிழ்ச்சியும், உற்சாகமும், நல்ல அனுபவங்களும் தந்திருக்கும் என நம்புகிறேன். ஆண்டவர் நமக்குத் தந்த குடும்பங்களுக்காய், நண்பர்களுக்காய், உறவுகளுக்காய், திருச்சபைக்காய், இந்த நல்ல தேசத்திற்காய், நம் தாய்த்திரு நாட்டிற்காய்க் கர்த்தரைத் தொடர்ந்து போற்றுவோம். முழு உலகமும், முழு படைப்பும் இறைமீட்பின் திட்டத்தில் ஈர்க்கப்பட தொடர்ந்து ஜெபிப்போம். ஓவ்வொரு நொடியும், மூச்சும் இறைவனின் அருட்கொடை என்பதே நமது அசைக்கமுடியாத நம்பிக்கை. அக, புற வாழ்வில் இறைப்பற்றையும், நன்னடத்தையையும் வெளிப்படுத்தும் புதுவாழ்வின் சாக்கிரமெந்தாகிய திருமுழுக்கைக் குறித்து இம்மடலில் சற்று அறிவோம்.

**சாக்கிரமெந்தின் பொருள் (The meaning of the Sacrament):**
“திரு” என்றால் “கடவுள்”, “முழுக்கு” என்றால் “மூழ்குதல்”. அதாவது கடவுளுக்குள் அவருக்குப் பிரியமான ஒரு புதிய வாழ்வை, புதிய மனிதனை மீண்டும் வெளிப்படுத்தும் தெய்வீக அடையாளமே திருமுழுக்காகும். இதை “ஞானஸ்நானம்” என்று வடமொழியில் அழைக்கிறோம். ஞானமாய் வாழ்வதற்குரிய ஓர் குளியல். ஆங்கிலத்தில் Baptism என்று அழைக்கப்படும். இச்சாக்கிரமெந்தின் பொருள் *“Christian religious rite of sprinkling water on a person's forehead or of immersing him/her in water, symbolizing purification or regeneration and admission to the Christian Church” (Oxford Dictionary). In many denominations, baptism is performed on young children and is accomplished by name giving called Christening.*

பொதுவாகத் திருமுழுக்கு என்பது முழுகியோ அல்லது தெளித்தோ, தலை அல்லது மேல்நெற்றி மீது தண்ணீர் ஊற்றிக் கழுவியோ செய்யப்படும் புனிதச் சடங்காகும். இதன்படி ஒருவர் பழைய, தீய, சுயநல வாழ்வை விட்டுப் புதிய, இறைநெறி வாழ்வைப் பெறுகிறார் எனவும், இனி அவர் இறைவனுக்குப் பிரியமில்லாத செயல்களில் ஈடுபடாமல், இறை விருப்பத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கிறார் எனவும் உணரலாம். இதைச் சிறார்களுக்கு (Children) வழங்கும்போது சிறுவயதிலிருந்தே இறைநெறிக்கு ஏற்பப் பிள்ளைகளை வளர்க்க பெற்றோரும், ஞானப்பெற்றோரும், திருச்சபையும் வாக்குக் கொடுக்கிறார்கள். பிள்ளைகளும் அதை உணர்ந்து பயபக்தியுடன் வளர்கிறார்கள்.

## சாக்கிரமெந்தின் தோற்றம் (Origin of the Sacrament):

பொதுவாகத் தண்ணீர் ஒரு மனிதனின் உடலில் உள்ளேயும், வெளியேயும் தூய்மைப்படுத்துகிறது. ஆகவே அது சுத்திகரிப்பின் ஓர் அடையாளம். திருமறையின் வெளிச்சத்திலே தண்ணீரிலிருந்தே தரை உருவானது. புதுப்படைப்புகள் உருவாயின. வாழ்வும் உருவானது. ஆகவே திருமுழுக்கு என்னும் இச்சாக்கிரமெந்தில் தண்ணீர் வெளிப்படையான அடையாளமாகவும் (Water as an external sign) அதன் வழியே பக்தியுடன் நிறைவேற்றப்படும் இச்சாக்கிரமெந்தின் வழியே உள்ளான சுத்திகரிப்பும், புதுவாழ்வும் ஒருவர் கண்டடைகிறார் என்பதே அடிப்படையான நம்பிக்கை *(Through which a person receives internal or spiritual purification and newness in life by the grace of God)*. முதன்முதலில் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து மீண்டும் கானானுக்குத் திரும்பிய எபிரேயர்கள் அல்லது யூதர்கள், வேறுசமயத்திலிருந்து யூதரல்லாத (Proselytes) மக்கள், யூத சமயத்திற்கு நம்பிக்கை மாற்றம் பெற விழையும் மதமாற்றத்தின் ஓர் அடையாளமாகவே திருமுழுக்கு வழங்கப்பட்டது. (A sign of religious or faith conversion). ஆனால் காலப்போக்கில் எபிரேயர் வாழ்வில் அதுவும் சடங்காகிப்போனதால் யோவான் என்ற இறைவாக்கினர் மனந்திரும்புதலுக்கேற்ற, பாவ மன்னிப்பின் அடையாளமாகத் திருமுழுக்கை உறுதிசெய்கிறார். (A sign of the conversion of heart). ஆகவே அவர் பெயர் “திருமுழுக்குநர் யோவான்” என்றே அழைக்கப்பட்டது. ஆகத் திருமுழுக்கு வெறும் மதமாற்றத்தின் அடையாளமாய் விளங்குதல் போதாது, அது மனமாற்றத்திற்கு வழிவகுக்கவேண்டும் என்பதை அறியமுடிகிறது.

## இயேசுவின் திருமுழுக்கு (The Baptism of Jesus):

இன்றைக்குத் திருச்சபைகளைக் குழப்புகிற 2 கேள்விகள்:

1.குழந்தைகள் திருமுழுக்கு ஏற்புடையதா?
2.தெளித்துத் திருமுழுக்குத் தருதல் ஏற்புடையதா?

இவையிரண்டிற்கும் ஆதாரமாக இயேசுகிறிஸ்துவின் திருமுழுக்கு சுட்டப்படுகிறது. இயேசுநாதர் வளர்ந்தபிறகுதானே திருமுழுக்கு எடுத்தார். ஆகவே குழந்தைகளுக்குத் திருமுழுக்கு தருதல் கூடாது என்று ஒரு சாரார் கேள்வி எழுப்பி குழப்பம் விளைவிக்கின்றனர். இயேசுநாதர் 30 வயதில் எடுத்தார். அப்படியானால் 30 வயதில்தான் எடுக்கவேண்டுமா? இயேசுநாதருக்கு பாவமன்னிப்புக்கேற்ற திருமுழுக்கு அவசியமில்லை. அவர் பாவமே செய்யாதவர். ஆகவே இயேசுவின் திருமுழுக்கையும், நாம் பெறும் திருமுழுக்கையும் ஒன்றாய் இணைத்துப் பார்க்க இயலாது. இயேசு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காய், “இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது” என்று தன் திருமுழுக்கிற்கு ஒரு விளக்கம் தருகிறார் (மத்தேயு 3:15).

அதன்படி குற்றமில்லாதவர், பாவிகளோடு அடையாளப்படுத்தப்படவும், பாவிகளுக்காக மரிக்கவும், அதன் வழியே பாவமன்னிப்பையும், மீட்பையும் உண்டுபண்ணவே அப்படிச் செய்தார் *(Jesus' baptism was His mission of salvation and not a ritual).* அதோடுமட்டுமல்ல, இயேசுவின் போதகத்தைக் கேட்டு, அவர் வழி நடக்கவும், யூதத் திருமுழுக்கினின்று வேறுபடுத்திக் காட்டவுமே இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் திருமுழுக்குக் கொடுத்தனர் (யோவான் 4:2 Mathew Henry commentary).

## திருச்சபையின் திருமுழுக்கு (The baptism of the Church):

இயேசுகிறிஸ்துவை சொந்த மீட்பராக ஏற்று, மனந்திரும்பிய 3000 பேருக்கு பெந்தேகொஸ்தே நாளில் திருமுழுக்கு வழங்கப்பட்டது. அவர்களில் சிறுவர்கள் இல்லை என்று சொல்ல இயலாது (அப்.2:41). அதேபோல, யூதரல்லாத கொர்நேலியு வீட்டார் பேதுருவின் வழியே திருமுழுக்குப் பெற்றார்கள் (அப். 10:47,48). இந்தக் குடும்பத்தில் சிறார்கள் இல்லை எனச் சொல்ல இயலாது. ஆகவே சிறுவர், பெரியோர் உள்ளிட்ட அனைவருக்கும் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. இச்சாக்கிரமெந்து வயது, இனம், நிறம், மொழி அனைத்தையும் கடந்த ஒன்றாகும். ஆகவே சடங்கின் முறைமையைச் சொல்லிக் குழப்பமடையாமல், இச்சாக்கிரமெந்தின் மகத்துவத்தை உணர்ந்து நாமும், நம் பிள்ளைகளும் புதுவாழ்வு பெறுவோம். கிறிஸ்துவின் வழியில் பிறரையும் திருப்ப நம்மை அர்ப்பணிப்போம். ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

# NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Vikrant Bhat
S/o.Mr.Aditya Bhat & Mrs.Angela Aditya
25-05-2016

Angelina Miraclin
D/o.Mr.Jayaseelan Anbalagan & Mrs.Deepa Elizabeth Anbalagan
11-07-2016

Judah Manuel
S/o.Mr.Arun Manuel & Mrs.Anugraha Arun Manuel
22-07-2016

Rijo Jeyan & Lijo Sam
S/o.Mr.Peter Thomson & Mrs.Smile Peter
27-07-2016

## கிறிஸ்துவுக்குப் பிரியமான பிரிஸ்கில்லாள் (PRISCILLA)
(அப்.18:2,18,26, ரோமர் 16:3, 1 கொரி. 16:19, 2 தீமோ.4:19)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

நம்மை உருவாக்கி, தம்முடைய உள்ளங்கைகளில் வரைந்திருக்கிற, பெயர் சொல்லி அழைத்திருக்கிற நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே இப்புதிய மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பத்திரமாய்ப் பாதுகாத்த அவருடைய கிருபைக்காய் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். விடுப்பு நேரங்களில் தாயகம் சென்று பெற்றோரையும், உடன்பிறப்புக்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் சந்திக்க, மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொள்ள கடவுள் கொடுத்த வாய்ப்புக்காக நன்றி சொல்லுவோம். அநேகர் விடுப்பின் நாட்களில் இங்கேயே தங்கியிருந்து சுகபெலனோடு இருந்ததற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். மீண்டுமாய் நாம் நம் பணிகளுக்குத் திரும்பி கடவுளுக்காய் சாட்சியாய் ஜீவிக்க அழைக்கப்படுகிறோம். இம்மாதத்திலும் கிறிஸ்துவுக்குப் பிரியமான ஊழியக்காரி பிரிஸ்கில்லாளைக் குறித்துப் பார்ப்போம்.

பிரிஸ்கில்லாள் என்பதற்கு 'மிகப்பழமையான, எளிமையான, தகுதியான, போற்றுதற்குரிய' என்று பல அர்த்தங்கள் உள்ளன. இதன் அடிப்படையில் தன் எளிமையினாலும், பக்தியுள்ள நடத்தையினாலும், ஆண்டவருக்கு ஏற்புடைய ஊழியக்காரியாக பெயருக்கு ஏற்றாற்போல் வாழ்விலே விளங்கினார். சிறிய ஆசியா பகுதியைச் சேர்ந்த யூத குடும்பத்தைச் சேர்ந்தவர். கொரிந்து மற்றும் பிற பட்டணங்களில் பவுலுக்குப் பிரியமாக பவுலுடன் இணைந்து திருப்பணி செய்தவர். இவரைக் குறித்த சில பண்புகளையும், செயல்களையும் பார்ப்போம்.

**1.குடும்பமாய் ஊழியம் செய்தவர்கள் (Marital Ministers):** பிரிஸ்கில்லாளை அவரது கணவர் ஆக்கில்லாயின்றித் தனித்துப் பார்க்க இயலாது. இருவரும் கணவனும் மனைவியுமாய் குடும்பத்தைக் கட்டி எழுப்பி, இணைபிரியாமல் ஊழியம் செய்தவர்கள். ஊழியத்திலே தன் கணவரோடு இணைந்து எந்த நுகத்தையும் ஏற்றுக்கொண்ட விசுவாச துணைவிதான் பிரிஸ்கில்லாள். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கு எதிராக ஒருவர் சிந்தித்துச் செயல்படாமல், ஒருவருக்கேற்ற துணையாய், இணைந்து நின்று திருப்பணி செய்திருக்கிறார்கள். இதிலிருந்து இவர்களின் அன்பையும், விட்டுக்கொடுத்தலையும், புரிந்துகொள்ளுதலையும் அறியமுடிகிறது.

**2. கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தவர்கள் (Serving together for Christ):** விசுவாசத்தினாலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருடைய ஊழியக்காரர்களாக பவுலால் அடையாளம் காணப்பட்டவர்கள் (அப்.18:2). பவுலால் அதிகம் நேசிக்கப்

பட்டு, இன்னும் ஆழமான கிறிஸ்துவ விசுவாசத்திலே ஊன்றக் கட்டப்பட்டு அப்போஸ்தலர்களால் கனம் பெற்றவர்கள். இவர்கள் பவுலால் கண்டுபிடிக்கப்பட்ட தேவ பொக்கிஷங்கள். அடிப்படையில் இவர்கள் யூதர்களாக இருந்ததால் பழைய ஏற்பாட்டை நிச்சயமாக கற்றுத் தேர்ந்தவர்களாக இருந்திருக்கவேண்டும். கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகு, கிறிஸ்துவே எதிர்பார்த்த மேசியா என்பதில் நிச்சயமாய் நிலைத்திருந்தவர்கள். ஆகவே பவுலால் பாராட்டப்பட்ட ஆதித்திருச்சபையின் அப்போஸ்தலர்களுள் சிறப்பிடம் பெற்றிருந்தார்கள்.

3. உடைமைகளால் ஊழியம் செய்தவர்கள் (Serving through Secular occupation): பிரிஸ்கில்லாலும், ஆக்கில்லாவும் கூடாரத் தொழில் செய்பவர்கள் என்று லூக்கா வெளிப்படுத்துகிறார் (அப்.18:3). பவுலுக்கும் இத்தொழில் தெரிந்திருந்ததால், பவுலுடைய பயணங்களுக்கும் இவருடைய உதவி சிறப்பானதாய் இருந்தது (அப்.20:34, 1 தெசலோ.2:9). கடினமாய் உழைக்கிறதற்குக் கொஞ்சமும் வெட்கப்படாதவர்களும், தாங்கள் செய்கிற தொழிலில் மிகவும் தேறினவர்களாயும், அதன் வழியே தங்கள் பணியில் கடவுளுக்கு உண்மையுள்ளவர்களாயும் இருந்தார்கள்.

‘தன் பிள்ளைக்குத் தொழில் ஒன்றைக் கற்றுக்கொடுக்காத எந்த ஒரு தகப்பனும், தன் பிள்ளையைத் திருடன் ஆக்குகிறான்’ என்பது ஒரு யூத பழமொழி. யூதர்களுக்குத் தத்தம் தொழில் கடவுளால் கொடுக்கப்பட்ட கனத்திற்குரிய ஒன்றாகும். நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கு தச்சுத்தொழில் எப்படியோ, அப்படியே பிரிஸ்கில்லா, ஆக்கில்லாவுக்குக் கூடாரத் தொழிலாகும். இதைக்கொண்டு கர்த்தருக்குப் பல வகைகளில் பணி செய்தார்கள்.

4. திருச்சபைக்கு ஊழியம் செய்தவர்கள் (Serving together to the Church): ரோமர் 16:3-ன்படி பிரிஸ்கில்லாலும், ஆக்கில்லாவும் திருச்சபை பணியிலே தன்னுடைய உடன் வேலையாட்கள் என்று பவுல் ரோமசபைக்குக் குறிப்பிடுகிறார். இதற்கு அடிப்படையான காரணம் என்னவெனில் ஆதிச்சபைகள் மற்றும் அதன் வழிபாடுகள் வீடுகளில் நடைபெற்றன. இத்தம்பதியரின் வீடு ஒரு குட்டித் திருச்சபை. இங்கு பவுல் அடிக்கடி வந்து பிரசங்கிக்கவும், விசுவாசிகளுடன் இணைந்து சபை நடத்தியும் இருக்கிறார் என்று ஆதித்திருச்சபை வரலாற்று ஏடுகள் சுட்டிக்காட்டுகின்றன. முதலில் தங்களை கிறிஸ்துவுக்கும், பின்னர் தங்கள் வீட்டை திருச்சபை ஊழியங்களுக்கும் அர்ப்பணித்த சிறப்பிற்குரிய பெண்ணாகிய பிரிஸ்கில்லாளையும், அவர் தம் கணவர் ஆக்கில்லாவையும் போன்று நாமும் குடும்பங்களாய் அவரவர் தத்தம் அழைப்பிலே உண்மையுள்ளவர்களாயிருந்து தம் தொழிலாலும், உடைமையாலும், நேரத்தாலும், திறமையாலும் கிறிஸ்துவின் ஊழியத்தைச் சேர்ந்து நிறைவேற்றுவோமாக. ஆமென்.

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர்,
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## வாக்குத்தத்த செய்தி

### என்னிடத்தில் கொண்டு வாருங்கள் - மத்தேயு 14:18

அன்பானவர்களே, இரட்சகராம் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த வருடத்தின் ஒன்பதாம் மாதத்தைக் காணச்செய்த நம் ஆண்டவர், இம்மாதத்திலும் நம்மை ஆச்சரியமாய் வழிநடத்த வல்லவராயிருக்கிறார். அவருடைய வார்த்தையை நமக்கு உணவாக, பெலமாக, அரணாக, வழிகாட்டியாக நினைத்து, விசுவாசித்து வாழ ஒப்புக்கொடுக்கும்போது, தேவன் சகலத்தையும் நன்மைக்கேதுவாகவே நடத்துவார். விசேஷமாக இம்மாதம் ஆண்டவர் நமக்குத் தரும் அருள்வார்த்தை “என்னிடத்தில் கொண்டுவாருங்கள்”. எதையெல்லாம் அவரிடம் கொண்டுவர விரும்புகிறார் என்பதைக் குறித்து இம்மாதத்தில் தியானிப்போம். முதலாவதாக

#### 1.பாரத்தைக் கொண்டு வாருங்கள் (மத்தேயு 11:28):

இவ்வசனத்தில், இயேசுகிறிஸ்து, “பாரம் சுமப்பவர்கள் என்னிடம் வாருங்கள்” என அழைக்கிறார். மனிதனால் சுமக்க முடியாத பாரங்கள் உண்டு. எவையெனில்: பாவம், சாபம், பிசாசு, வியாதி, பயம். இவைகளினால் உண்டாகும் பாரம் மனிதனால் தாங்க இயலாதவை. மேலும் இவை நம் இருதயம், சிந்தை, சரீரத்தில் வேதனையை உருவாக்கி, நம்மைச் சோர்வுறச் செய்து, நமக்கே நாம் பாரமாக இருப்பதுபோல் மாற்றிவிடும். ஆகவே உங்கள் கவலைகளையெல்லாம் அவர் பேரில் வைத்துவிட வேண்டும் என 1 பேதுரு 5:7-ல் பேதுரு கூறுகிறார்.

உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழைக்கிறவர் இந்த பாரங்களையெல்லாம் சுமந்து தீர்க்கிறதற்காகவே பிதாவால் அனுப்பப்பட்டவர் (மத்தேயு 8:17). அவரிடம் கொண்டுவரும்போது, அவருக்குள் இளைப்பாறுதல் பெற்றுக்கொள்கிறோம். அதற்காகவே, இப்பூமிக்கு அவர் வந்து, நமக்கு இளைப்பாறுதலை உண்டுபண்ணும் ஆக்கினையை அவர் சிலுவையில் சுமந்து தீர்த்துவிட்டார். இனி இந்த பாரங்களை நாம் சுமக்கத் தேவையில்லை. எவ்வகை பாரமாயிருந்தாலும், இம்மாதத்தில் அவரிடம் கொண்டுவாருங்கள். அவர் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவார்.

மத்தேயு 8:2-ல் நீண்ட நாள் குஷ்டரோகம் என்னும் வியாதியால் பாரப்பட்டு, தன் சரீரத்தில் வேதனையை அடைந்த ஒருவன், தன் பாரத்தை அவரிடம் கொண்டு வந்தான். என்னைச் சுத்தமாக்கும் என்றான். பாரம் நீங்கி இளைப்பாறுதல் அடைந்தான்.

### 2. சூழ்நிலையைக் கொண்டு வாருங்கள் (மத்தேயு 14:15):

இவ்வசனத்தில் சீஷர்கள் வனாந்திரத்தில் இயேசுவிடம் கடினமான சூழ்நிலையைக் கொண்டு செல்வதைப் பார்க்கிறோம். அவர்களின் கடின சூழ்நிலைகள்: வனாந்திரம், நேரமுமாயிற்று, 5 அப்பம் 2 மீன் மட்டுமே உள்ளது என்பதே. இச்சூழ்நிலையில் இத்தனை பேர் சாப்பிட்டு திருப்தியாக முடியுமா? என்ற கேள்வியோடு, அச்சூழ்நிலையோடு இயேசுவிடம் கொண்டுவந்தனர். இயேசுகிறிஸ்து அந்த வனாந்திர அனுபவத்தை விருந்துசாலையின் அனுபவமாக மாற்றினார். முடியாது என்ற நிலையை முடியும் என்ற நிலையாக மாற்றுபவர் அவரே. அவரால் மாற்ற முடியாத ஒரு சூழ்நிலை ஒன்றுமில்லை. அவரால் எல்லாம் கூடும்.

வனாந்திரத்தைத் தண்ணீர் தடாகமாகவும், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல மாற்றுகிற வல்லமையுடையவருமாகிய நம் ஆண்டவர் நம் வாழ்விலும் அப்படியே கிரியை செய்வாராக.

### 3.மனுஷனால் முடியாததைக் கொண்டு வாருங்கள் (மாற்கு 10:27):

அநேக நேரங்களில், நம் வாழ்வில், மனிதர்களால் கைவிடப்பட்ட நிலை உருவாகிறது. அந்நிலையில் ஆண்டவர், “நான் உன்னைக் கைவிடுவதில்லை” என வாக்களிக்கிறார். வேதத்தில் 12 வருடமாக பெரும்பாடு கொண்ட ஒரு ஸ்திரீ, தன் பணத்தையெல்லாம் செலவழித்தும், மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் இயேசுகிறிஸ்துவின் வஸ்திரத்தைத் தொடவேண்டும் என்ற எண்ணம் அவளுக்குள் வருகிறதை மாற்கு 5:27-ல் பார்க்கிறோம். அவரை நெருங்கித் தொட்டபோது, அவரிடமிருந்து வல்லமை புறப்பட்டது. மனிதனால், பணத்தால் சரிசெய்து சாதிக்க முடியாததை இயேசுகிறிஸ்துவின் வல்லமை சரி செய்ததைத் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.

மனிதன் உதவி செய்வான் என்றும், பணம் நம்மைக் காப்பாற்றும் என்றும் எண்ணுவோமாகில், அதின் முடிவு வேதனையே. ஆனால் திராட்சைச் செடியாம் நேசர்மீது கொடியாகச் சார்ந்து படர்ந்தால் காரியம் ஆம் என்றும், ஆமென் என்றும் முடியும்.

இம்மாதத்தில் நம்முடைய பாரங்களை, சூழ்நிலைகளை, முடியாதவைகளை இயேசுகிறிஸ்துவிடம் கொண்டுவருவோம். ஆச்சரியமான அவருடைய இரட்சிப்பைக் காண்போம்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

வினோத் எதைச் செய்தாலும் ஜெபத்தோடு கூட கடுமையாக முயற்சி செய்வான். இதனால் பல காரியங்களில் அவனால் வெற்றி பெற முடிந்தது. ஆனால் கணக்குப்பாடத்தில் மட்டும் அவனால் அதிக மதிப்பெண் பெற முடியவில்லை. எப்படியோ குறைந்த மதிப்பெண்ணில் தேர்ச்சிபெற்று ஒவ்வொரு வகுப்பாகக் கடந்துவிட்டான். அவன் 12-ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். வீட்டுக்கணக்கு போடுவது கூட அவனுக்குச் சிரமமாக இருந்தது.

ஒருமுறை பள்ளிக்குச் சீக்கிரமாகவே சென்ற அவன், ஏற்கனவே வந்திருந்த ஒரு மாணவனின் நோட்டை வாங்கி, கணக்குகளைக் காப்பி பண்ணிவிட்டான், அன்றைக்கு வந்த கணக்கு ஆசிரியர், வினோத் எல்லாக் கணக்குகளையும் போட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தார். மேலும் அதில் ஒரு கணக்கைக் குறிப்பிட்டு, அதைக் கரும்பலகையில் போடு என்றார். கரும்பலகையின் அருகே சென்ற அவனால் கணக்கைப் போடமுடியவில்லை. ஏண்டா, கணக்கைப் போட்டுப் பயிற்சி பெறவேண்டும் என்றே வீட்டுக்கணக்கைக் கொடுக்கிறேன். அதிலும் காப்பி அடித்தால் எப்படி தேறப்போகிறாய் என ஆசிரியர் திட்டினார். அது அவனுக்கு அவமானமாக இருந்தது.

அதற்குப்பின்பு அவன் நேரம் கிடைக்கும்போதெல்லாம் கணக்குகளைப் போட்டுப் பார்த்தான். இரவிலும் அதிகநேரம் கண்விழித்து முயற்சி செய்தான் என்றாலும் அவனுக்கு First Term-ல் 45 மார்க் மட்டுமே கிடைத்திருந்தது. மற்ற பாடங்களில் எல்லாம் 90 மதிப்பெண்களுக்கு மேலாகப் பெற்றிருந்தான். அவனுடைய அம்மா, அவனிடம், டேய், இந்த வருடம் கணக்கில் பாஸ் பண்ணினால் மட்டும் போதாது. அதிக மதிப்பெண் எடுத்தால் மட்டுமே நீ விரும்புகிற பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்கும் என்றாள். அவனுடைய முகம் சோர்ந்து போயிற்று. அதைக்கண்ட அம்மா, கவலைப்படாதே, நீ ஜெபத்தோடு கடுமையாக முயற்சிசெய்து படிக்கிறாய். நீ உன்னுடைய சொந்த அறிவைச்சார்ந்து முயற்சி செய்கிறாய். அதுமட்டும் போதாது. நீ தேவனுடைய வல்லமையை விசுவாசித்து, அதைச் சார்ந்து செயல்படவேண்டும் என அவனுக்குப் புத்திமதி சொன்னார்கள். மேலும், நம்முடைய விசுவாசம் மனித ஞானத்தைச் சார்ந்திராமல், தேவனுடைய பலத்தில் நிற்கவேண்டும் என 1 கொரி.2:4-ல் பவுல் கூறுகிறார் எனச் சுட்டிக்காட்டினார்கள்.

அன்றிலிருந்து அவன் ஆண்டவர்மீது தனது விசுவாசத்தை அறிக்கையிட்டு ஊக்கமாக ஜெபித்தபிறகே தனது பாடங்களைப் படிக்கத் தொடங்கினான். ஏதேனும் கணக்கு தெரியாவிட்டால் முழங்கால் படியிட்டு, ஆண்டவரே எனக்கு இந்தக் கணக்கு புரியவில்லை, அதை விளக்கிக்காட்டும் என ஜெபித்து தேவ ஒத்தாசையைப் பெறுவான். விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் அவன் செய்யும் முயற்சிகளைத் தேவன் ஆசீர்வதித்தார்.

ஒருநாள் வகுப்பில் கணக்குப்பாடத்தில் 1st mark எடுக்கும் மதி என்ற மாணவன், ஒரு கணக்கில் சரியான விடை வராமல் கணக்கு நோட்டை வைத்துக்கொண்டு விழித்துக் கொண்டிருந்தான். சற்று நேரம் இதைக் கவனித்த வினோத், விசுவாசத்தோடு மௌனமாக ஜெபித்துவிட்டு, அந்த மாணவனுக்கு அந்த கணக்கை எப்படிப்போடுவது என சொல்லிக் கொடுத்தான். மதி திகைத்துவிட்டான். வகுப்பே ஆச்சரியப்பட்டது! கணக்கு ஆசிரியர் இதைக் கேள்விப்பட்டு அவனைப் பாராட்டினார்.

பள்ளி இறுதித்தேர்வு வந்தது. விசுவாச ஜெபத்தோடு வினோத் தேர்வுக்குச் சென்றான். தேர்வை தேவகிருபையோடு எதிர்கொண்டான். பள்ளி இறுதித்தேர்வு முடிவுகள் வெளியாகியது. மற்ற பாடங்களில் 90 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியிருந்த அவன் கணக்கில் 80 மதிப்பெண் வாங்கியிருந்தான். அவன் முழங்காற்படியிட்டு தேவனுக்கு நன்றி கூறினான்.

மனப்பாட வசனம் : எபிரெயர் 11:6

வேதவாசிப்புப் பகுதி : விசுவாச முற்பிதாவாகிய ஆபிரகாம். ரோமர் 4:16-25

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

# MEMORY VERSE CONTEST - 2016

**The Memory Verse Contest is scheduled to be held on 23rd September 2016.**

**You can download your respective memory verses from Pre-KG to Grade 12 from our church website.**

**LEARN AND BE BLESSED.**

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 9 எல்லாருக்கும்

ஆராதனை இறுதி கவி : பாமாலை 205 கவி 3 கெம்பீரமாகவே

### 02-09-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 155 | சர்வத்தையும் அன்பாய் |
| பாமாலை | 178 | தீராத தாகத்தால் |
| கீர்த்தனை | 125 | தேவபிதா என்றன் மேய்ப்பன் |
| கீர்த்தனை | 126 | நம்பி வந்தேன், மேசியா, நான் |
| கீர்த்தனை | 124 | துங்கனில் ஒதுங்குவோன் |

### 09-09-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 5 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை | 135 | உந்தன் சொந்தமாக்கினீர் |
| கீர்த்தனை | 92 | உன்றன் சுயமதியே |
| கீர்த்தனை | 87 | சத்திய வேதத்தை தினம் தியானி |
| கீர்த்தனை | 169 | எங்கும் புகழ் இயேசு |

### 16-09-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 8 | எல்லாம் சிஷ்டித்த நமது |
| பாமாலை | 41 | நேர்த்தியானதனைத்தும் |
| கீர்த்தனை | 168 | நித்தம் முயல் மனமே |
| கீர்த்தனை | 148 | பாதம் ஒன்றே வேண்டும் |
| கீர்த்தனை | 166 | ஆண்டவரின் நாமமதை |

### 23-09-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 166 | சபையின் அஸ்திபாரம் |
| பாமாலை | 107 | நிர்பந்தமான பாவியாய் |
| பாமாலை | 163 | ஆ சகோதரர் ஒன்றாய் |
| கீர்த்தனை | 4 | ஆத்துமமே என் முழு உள்ளமே |
| கீர்த்தனை | 7 | எந்நாளுமே துதிப்பாய் |
| கீர்த்தனை | 128 | அன்பே பிரதானம் சகோதர |

### 30-09-2016

| | | |
|---|---|---|
| பாமாலை | 153 | ஆ என்னில் நூறுவாயும் |
| கீர்த்தனை | 109 | பாதகன் என் வினைதீர் |
| பாமாலை | 149 | சிலுவை சுமந்தோனாக |
| கீர்த்தனை | 117 | இயேசு என் அஸ்திபாரம் |
| கீர்த்தனை | 10 | சத்தாய் நிஷ்களமாய் |
| கீர்த்தனை | 13 | சீர்மிகு வான்புவி தேவா |

கர்த்தருடைய கிருபையால் இப்புதிய மாதத்தைக் காணச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

கடந்த விடுமுறைக் காலங்களை உங்கள் குடும்பங்களோடு, உறவினர்களோடு சந்தோஷமாய்க் கழித்திருப்பீர்கள் என நம்புகிறேன். பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு ஒரு New Term-ஐ கர்த்தர் கிருபையாகத் தந்திருக்கிறார். அவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபிப்போம்.

அதுபோல கடந்த இரண்டு மாதங்களாகச் சிறப்பாக ஆண்டவருடைய தூய மகிமைக்கென்று நடைபெற்ற Summer Camp-க்காக கர்த்தரைத் துதிக்கிறேன். இதைச் சிறப்பாக நடத்திக் கொடுத்த Mrs.Priya Selvam அவர்களையும், இணைந்து பணியாற்றிய ஆசிரியர்கள், Volunteers மற்றும் பங்கு பெற்ற பிள்ளைகளையும் பாராட்டுகிறேன்.

நமது திருச்சபையின் இவ்வாண்டு ஸ்தோத்திரப் பண்டிகைக்கான முயற்சிகள் மீண்டும் துவங்கியுள்ளன. Stalls வைத்த, வைக்க இருக்கிற ஜெபக்குழுக்களை வாழ்த்துகிறேன். மூன்று சபைகளிலும் நடைபெறவுள்ள ஸ்தோத்திரப் பண்டிகைக்காக ஜெபிக்கவும், உதாரத்துவமாய்க் கொடுக்கவும், இதன்வழியாக ஊழியங்கள் இன்னும் அதிகமாய்த் தாங்கப்படவும் ஜெபிப்போம்.

நமக்கென்று ஒரு ஆலயம் கட்டப்படுவதற்கான நிலம் வாங்கும் முயற்சிகள் வெற்றிபெற கர்த்தருடைய கிருபையை வேண்டுவோம்.

சிங் ரெத்னம், செயலர்.

## வேத வகுப்பு ஆராய்ச்சி

முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் புதன் கிழமைகளில் இரவு 8:00 மணிக்கு போதகர் இல்லத்தில் நடைபெறும்

## ஆங்கில ஆராதனை

முதல் மற்றும் மூன்றாம் வாரம் வெள்ளிக்கிழமை தோறும் காலை 6:00 மணி முதல் 7:15 மணி வரை திருவிருந்து ஆராதனை ஆங்கிலத்தில் நடைபெறும்.

# திருமறைப் பாட ஒழுங்குகள் - செப்டம்பர் 2016

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-09-2016 பொதுநிலையினர் தினம் | கிறிஸ்துவை நம்புகிற அனைவருமே ஆசாரியர்கள் | ஏசாயா 61:1-11 | 1 பேதுரு 2:1-10 | யோவான் 17:1-8 | 135:12-21 |
| 09-09-2016 ஆசிரியர் தினம் | திருச்சபையின் கல்வித் திருப்பணி | நெகேமியா 8:1-8 | அப்போ. 18:24-28 | மத்தேயு 5:1-12 | 119:41-48 |
| 16-09-2016 | நுகர்வு மயத்திற்கான கிறிஸ்தவ மறுமொழி | ஆதியா. 3:1-7 | பிலிப்பியர் 3:17-21 | மத்தேயு 6:25-34 | 37 |
| 23-09-2016 தெ.இ.திருச்சபை தினம் | வழிபாட்டில் ஒற்றுமை | யாத்தி. 4:27-31 | 1 கொரிந். 3:1-15 | யோவான் 17:9-23 | 28 |
| 30-09-2016 மூத்தகுடிமக்கள் தினம் | முதியோரை ஏற்றலும் கரிசனை அளித்தலும் | ஆதியா. 46:28-34 | 1 தீமோத். 5:1-10 | லூக்கா 2:25-35 | 21 |

# வாழ்த்துகிறோம்

"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"

கர்த்தருடைய கிருபையால் ஜூலை மாதம் 11-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.S.Arul Selva Pebin & Mrs. V.Vincy Jeba Shalini

கர்த்தருடைய கிருபையால் ஜூலை மாதம் 13-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Justin Devakumar & Mrs. Remya

கர்த்தருடைய கிருபையால் ஜூலை மாதம் 15-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.R.Henry Vivian & Mrs. S.Shabareena Susan

கர்த்தருடைய கிருபையால் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.S.Daniel & Mrs. Anitha

கர்த்தருடைய கிருபையால் ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Paul Ravindranath & Mrs. Priya Rebecca

இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

எத்தியோப்பிய பக்தனை இழுத்து வந்தது
உயிர்த்த இயேசுவின் உயர்ந்த செயல்திறம்
பக்திஎழுச்சி எருசலேமில் பணிந்துஎழுந்து முதிர்ந்தது
பக்திக்கேற்ற புதுவிருந்து வைக்கப்பட்டது வேதவசனம்

எத்தியோப்பிய ராணிகந்தாகே மந்திரியாம் பயணிப்பது
எல்லாஅவள் நிதிக்கும் அவனே தலைவனாம்
பக்தி,வேதம் படித்து புத்திக்கெட்டாமல் தவித்து
தேவஉதவி தேடியோடி மனிதனாக வந்ததாம்

வடக்கேஎருசலேம் தெக்கேகாசா இடைவனாந்திரம் பாதையானது
வானதூதரும் பூமிசீடரும் செய்திபரிமாறு காலமது
தொடர்புகொள்ளும் பாலமிதை தேடிவந்ததேவன் இயேசுஅமைத்தது
வானஆணை வனாந்திரம்போக பிலிப்புக்கு எருசலேம்வந்தது

வானகத்துவேலை கானகத்தில் பிலிப்பால் நிறைவேறுது
ஓடும்ரதம் படிக்கும் எத்தியோப்பியர் ஆவலது
காணுகின்றான் பிலிப்பு ஏவுகின்றார் ஆவியர்வந்து
நெருங்கிவிடு ரதத்தோடே, வாசிப்பொலி வசனசத்தம்

அடிக்கப்போகும் ஆட்டைப்போல கொண்டுபோக நேர்ந்திட்டார்
மயிர்கத்தரிப்போன் முன்சத்தமிடா மறியைப்போல
வாய்பேசாதிருந்தார்
படி–தாழ்த்தினார் நியாயம்,உயிரும் எடுத்துப்போடப் பட்டுவிட்டார்
அவர்வம்ச வரலாற்றை அறிந்தெடுத்து யார்கூர்வார் ?

பிலிப்பைக்கேட்டார் வாசகர்மந்திரி, பிரசங்கித்தார் பிலிப்பு
புரிந்துகொண்டார் ஏற்றுக்கொண்டார் இயேசுவின் சிறப்பு
தவித்திருந்தார் தண்ணீர்கண்டார் இனிமேலும் தடைஎதுக்கு
ஞானஸ்னானம் பெற்றுவிட இங்கேயே எனக்கு ?

முழுஇருதயத்தால் விசுவாசித்தால் தடையில்லை என்றார்பிலிப்பு
அப்படியே இயேசுவை தேவகுமாரரென்று விசுவாசிக்கிறேன்
இழுத்துநிறுத்த ஆணையிட்டார் ரதத்தை, மந்திரி,பிலிப்பு
இறங்கிநீரில் கொடுப்பினை பெற்றுக்கொண்டார் ஞானக்குளிப்பு !

ஆதாரம் : அப்போஸ்தலர் 8:26–40
கவிதை எண் : 190 கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய். சங்கீதம் 50:15

கர்த்தருக்கும்
பக்தருக்கும்
இடையில் - ஒரு
தடை
இருக்கிறது.
கர்த்தர்
நம்மிடம்
எதிர்பார்ப்பது
திடபக்தி
உறுதியான
நம்பிக்கை
பரிபூரண
விசுவாசம்
இவைகளில்
உறுதியாய்
இருந்தால்
தடை
நம்மைவிட்டு
விடைபெறும்.
பாயில்
படுத்தாலும்
நோயில்
வீழ்ந்தாலும்
கடனில்
மூழ்கி
திடன் குறைந்தாலும்
உயிருக்கு
உயிரான
உறவு
உலகை விட்டுப்
பிரிந்தாலும்
கண்கள்
நீர்சொரிந்து
காய்ந்தும்
போனதே..
என் நாவும்
உலர்ந்தும்
போனதே.. என
வருந்தாதே..
ஆபத்துக்காலம்
எங்கே
எப்போது
எப்படி
வந்தாலும்
முப்பொழுதும்
ஏன்
எப்பொழுதும்
கர்த்தரை
நோக்கிக் கூப்பிடு.
சேய் மனதுடன்
கர்த்தரை
அழை.
தாய் மனதுடன்
இளகுவார்,
இரங்குவார்.
அப்பொழுதே
உன்னை
விடுவிப்பார்.
நம் பிணி
துன்பம்
தரித்திரம்
தொலைந்திடுமே,
புது சரித்திரம்
பிறந்திடுமே,
சமாதானம்
வந்திடுமே,
கர்த்தரின்
அருள்நோக்கு
பக்தருக்கு தரும்
அமுத வாக்கு
வாக்குத்தத்தம்
மாறாதவரே
நம் கர்த்தர்
மனிதரே...
அன்பரே...
கர்த்தரை
மகிமைப்படுத்துவோமா
அளவிலா
ஆற்றலுடையவரே
எல்லா
உலகங்களுக்கும்
சுவாமியானவரே
எங்கும் நிறைந்த
சிருஷ்டி கர்த்தரே
உமது
பாதங்களில்
சரணடைகிறேன்.
எல்லா
பாவங்களிலிருந்தும்
என்னை விலக்கி
நற்கதி தாரும்.
நிதமும்
காலை மாலை
எவ்வேளையும்
திடபக்தியுடன்
கர்த்தரை
துதிக்கும்
ஜெபிக்கும்
பாடும்
பக்தனுமே
பாவ விமோசனம்
சத்தியமே
பரம்
நிச்சயமே.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## ஆபிராம்!!!

ஆபிரகாம் இஸ்மவேலின் மனைவியிடம், “மகளே, பிரயாணத்தினிமித்தம் மிகவும் களைப்படைந்துள்ளேன். தாகத்திற்குச் சிறிது தண்ணீர் தா” எனக் கேட்டார்.

இஸ்மவேலின் மனைவி ஆபிரகாமை நோக்கி, “எங்களிடம் அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை” என்று பதிலளித்து விட்டு அந்த இடத்தை விட்டு நகராமல் அப்படியே அவரைக் கண்டுகொள்ளாமல் உட்கார்ந்திருந்தாள். அவர் யார் என்றோ எங்கிருந்து வருகிறார் என்றோ கேட்கவில்லை. மாறாக, தன்னுடைய குமாரரை அடித்து, துன்புறுத்தி தன்னுடைய புருஷனாகிய இஸ்மவேலை சபித்துக்கொண்டிருந்தாள். இந்த வார்த்தைகளைக் கேட்ட ஆபிரகாம் மிகவும் கோபமடைந்தார்.

உடனே ஆபிரகாம் கூடாரத்திலிருந்த அவளை அழைப்பித்தார். அவள் வந்து அவரின் எதிரே நின்றாள். ஆபிரகாம் இன்னும் ஒட்டகத்தின்மேலேயே அமர்ந்து கொண்டிருந்தார். ஆபிரகாம் அவளிடம், “உன் புருஷனாகிய இஸ்மவேல் வரும்போது, அவனிடம் நீ சொல்லவேண்டிய வார்த்தைகளாவன: ”பெலிஸ்திய நாட்டைச்சார்ந்த வயதான ஒரு மனிதர் உம்மைக் காணும்படி வந்திருந்தார். அவர் இன்னின்ன தோற்றமுடையவர். நான் அவரிடம் நீர் யார் என்று கேட்கவில்லை. உம்மைக் காணமுடியாததால், இஸ்மவேலாகிய உன் புருஷன் வரும்போது, கூடாரத்திலே நீர் வைத்திருக்கும் இந்த ஆணியை தூர எறிந்துவிட்டு, அதற்குப் பதிலாக வேறே ஆணியை பயன்படுத்து என்றார்” என்று சொல் என்றார்.

பின்பு ஆபிரகாம் தன்னுடைய ஒட்டகத்திலேயே அமர்ந்தவாறு தன் வழியே கடந்து சென்றார். இஸ்மவேலும் அவன் தாயாரும் கூடாரத்திற்குத் திரும்பியபோது இஸ்மவேலின் மனைவி ஆபிரகாமின் வார்த்தைகளை அவர்களுக்குத் தெரிவித்தாள். இஸ்மவேல் இவ்வார்த்தைகளைக் கேட்டபோது, வந்துசென்றது தன்னுடைய தகப்பனார் என்றும், தன்னுடைய மனைவியாகிய இவள் அவரை மதிக்கவில்லை என்றும் புரிந்துகொண்டார். இஸ்மவேல் தன்னுடைய மனைவி மூலமாக தான் கேட்ட தன் தகப்பனாருடைய வார்த்தைகளைப் புரிந்துகொண்டு அதற்குச் செவிகொடுத்தான். இஸ்மவேல் தன்னுடைய மனைவியை அவ்விடத்தைவிட்டு துரத்திவிட்டான். பின்பு இஸ்மவேல் கானான் தேசத்திற்குச் சென்று, தனக்கு ஒரு மனைவியை தெரிவு செய்து கொண்டு வந்தான். அவளுடன் தன் கூடாரத்தில் வாழத்தொடங்கினான்.

மூன்றாண்டுகளுக்குப் பின்னர், ஆபிரகாம் “இஸ்மவேலைப் பார்த்து வெகுநாட்களாகிவிட்டது. நான் மறுபடியும் அவனைச் சென்று பார்த்துவருகிறேன்” என்று கூறிக் கொண்டு மறுபடியும் இஸ்மவேலைக்

காண ஒட்டகத்தின்மீதேறி வனாந்தரத்தில் அமைந்திருந்த அவனுடைய கூடாரத்தை நோக்கிச் சென்றார். அவர் கூடாரத்தை மத்தியான வேளையில் சென்றடைந்தார். ஆபிரகாம் அந்தக் கூடாரத்தில் இருந்த அவனுடைய மனைவியிடத்தில் இஸ்மவேலைக் குறித்து விசாரித்தார். அவன் மனைவி அவரிடம் வெளியே வந்து, “ஆண்டவரே, அவர் இங்கே இல்லை. அவர் வேட்டையாடவும், ஒட்டகங்களை மேய்த்துவரவும் வயல்வெளிக்குச் சென்றுள்ளார். நீர் பிரயாணத்தினால் களைத்துப்போய் உள்ளீர். ஆகவே கூடாரத்தினுள் வந்து அப்பம் சாப்பிட்டு, சற்று இளைப்பாறும்” என்றாள்.

ஆபிரகாம் அவளைப் பார்த்து, “என்னால் வரமுடியாது. நான் பிரயாணம் பண்ணவேண்டிய தூரம் வெகுதூரம். ஆகவே என் தாகத்தை மாத்திரம் தணிக்க கொஞ்சம் தண்ணீர் தா” என்றார். உடனே அவள் வேகமாகக் கூடாரத்தினுள் ஓடி, தண்ணீரையும் அப்பத்தையும் அவருக்கு முன்பாக கொண்டுவந்து அவரைப் புசிக்குமாறு வற்புறுத்தினாள். அவர் புசித்து, குடித்து இருதயத்திலே மகிழ்வுற்றவராய் தன் மகனாகிய இஸ்மவேலை ஆசீர்வதித்தார்.

அவர் அவளிடம், இஸ்மவேலாகிய உன் புருஷன் வரும் போது, “பெலிஸ்திய நாட்டிலிருந்து ஒரு வயதான மனிதர் வந்தார். அப்பொழுது நீர் இல்லாததினால் நான் அவருக்கு அப்பமும் நீரும் புசிக்கக் கொடுத்தேன். அவர் தன்னுடைய இருதயத்திலே ஆறுதலடைந்து, என்னிடம் இவ்வாறு சொன்னார். உன்னுடைய கூடாரத்தின் ஆணி மிகவும் நல்லது. அதை தூர எறிந்துவிடாதே” என்று சொல் என்றார். இவைகளைத் தெரிவித்த ஆபிரகாம் தன்னுடைய கூடாரத்திற்கு கடந்துச் சென்றார்.

இஸ்மவேல் தன்னுடைய கூடாரத்திற்கு வந்தபோது அவன் மனைவி மிகுந்த மகிழ்ச்சியோடு நடந்தவற்றையும் ஆபிரகாமின் வார்த்தைகளை அவனுக்குத் தெரிவித்தாள். வந்து சென்றது தன்னுடைய தகப்பனார் என்பதையும், அவரைத் தன்னுடைய மனைவி நன்றாக கனப்படுத்தி அனுப்பினாள் என்பதையும் இஸ்மவேல் தெரிந்து கொண்டான். கர்த்தர் இஸ்மவேலை ஆசீர்வதித்தார்.

இஸ்மவேல் தன்னுடைய மனைவியையும் தன் குமாரர்களையும் அழைத்துக்கொண்டு தன்னுடைய மந்தையையும் மற்றும் தனக்குண்டான யாவற்றையும் எடுத்துக்கொண்டு, பெலிஸ்திய நாட்டிலுள்ள தன்னுடைய தகப்பனாரைக் காணச் சென்றான். பின்பு அங்கேயே சஞ்சரித்தான். நாட்கள் உருண்டோடியது. ஆபிரகாமோடு இருபத்தாறு வருடங்கள் சஞ்சரித்தான். பின்னர் ஆபிரகாம் தன்னுடைய வேலைக்காரர் மற்றும் அவருக்கு உண்டான யாவற்றோடும் பெலிஸ்திய நாட்டைவிட்டுவிட்டு எபிரோன் சென்று அங்கே துரவுகளை ஏற்படுத்திக்கொண்டு, தண்ணீர் துரவண்டை தங்கியிருந்தார்.

பின்பு ... நடந்ததென்ன?

நன்றி: யாசேரின் புத்தகம் தமிழாக்கம் & தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

"நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்; என் ராஜாவே,
என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்." சங்கீதம் 5:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- Summer Camp மிகவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக, விடுமுறை நாட்களில் தாயகம் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்று சுகபத்திரமாக திரும்ப, கர்த்தர் நம் திருச்சபை மக்களுக்குப் பாராட்டின தயவுகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்,

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
